மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: கனம் உறுப்பினர் அவர்கள் சொல்வது சாதாரணப் புகார்களைப் பற்றியது. அதை அவர்களுக்கே அனுப்பி அவர்களுடைய பதிலை பெற்றுக்கொள்வது, அத்தோடு விசாரணை முடிவடைந்து விடுகிறது என்று கனம் உறுப்பினர் அவர்கள் கருதத் தேவையில்லை.

THIRU K. VINAYAKAM : Sir, whenever an officer is suspected of some corruption charge, the Vigilance organisation is set upon to track them. But what is the *modus operandi* which the Government have got to keep the Vigilance organisation above suspicion.

THE HON. THIRU C. N. ANNADURAI : Sir, at some end or some place, we should place implicit confidence?

திரு. இரா. நாராயணன்: கெஜடெட் பதவி இல்லாத ரூ. 200-க்கும் குறைந்த சம்பளம் வாங்குகிற ஊழியர்களை இன்ஸ்பெக்டர் அவர்கள் பதிவு செய்ய முடியாது என்று சொல்கிறார்கள். அதைப்பற்றி அரசாங்கம் ஏதாவது பரிந்துரை இன்ஸ்பெக்டர்களுக்கு அனுப்பப்பட்டதா ? எந்த அரசாங்கம் அனுப்பப்பட்டது ? அல்லது இந்த அரசாங்கம் அனுப்பப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எந்த அரசாங்கம் அனுப்பப்பட்டது என்று கேட்கிறார், ஏதாவது அரசாங்கம் அனுப்பப்பட்டிருந்தால், பதில் சொல்லலாம். எந்த அரசாங்கமாவது எங்கேயாவது அனுப்பப்பட்டதா?

(விடை இல்லை)

திரு. கரு. சீமைச்சாமி: தலைவர் அவர்களே, இந்த லஞ்ச ஒழிப்பு கிரைம் பிராஞ்ச் ஸி.ஐ.டி. போலீஸ் இலாகாவில் இணைக்கப்பட்டிருந்தது. இப்பொழுது லஞ்சப் பிரிவுக்கு ஒரு தனிப் பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதனால் ஏதாவது முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறதா, அல்லது பழைய நிலைமையே தான் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: அப்படிப்பட்ட ஒப்பிட்டுப் பார்க்கும் சந்தர்ப்பம் வரவில்லை.

திரு. எம். சுரேந்திரன்: லஞ்ச ஊழல் எந்த மட்டத்தில் ஏற்பட்டாலும், விளைவுகள் மோசமாகும். இருந்தாலும், கெஜடெட் ஆபிஸர்களின் மேல் ஏற்படுகிற புகார்கள்தான் சமூகத்தில் ரொம்ப விளைவை உண்டாக்குகிறது. விஜிலன்ஸ் கமிட்டி அவர்களை அணுகுவதற்கு முடியாத நிலைமையில் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆகவே, இதில் ஒரு மாற்றத்தை உண்டாக்கி, இம்மாதிரி லஞ்சப் புகார்களைத் தடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: கனம் உறுப்பினர் அவர்கள் கெஜடெட் பணியாளர்களைப் பற்றிய புகார்களை விசாரிப்பதில் தயக்கம் இருப்பதாகச் சொன்னதை சர்க்கார் ஏற்றுக்கொள்ளவில்லை. அப்படிப்பட்ட கெஜடெட் பதவி பெற்ற அதிகாரிகளின் பேரிலும் முறையாக விசாரணைகள் நடைபெற்று நடவடிக்கைகள் கூட எடுத்துக்கொண்டதற்குச் சான்றுகள் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

(i) மதுரை மாவட்டத்தில் கைத்தறித் துணிகள் தேக்கம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு சட்டப்பேரவை விதி எண் 42-ன் கீழ், கீழ்காணும் அவசரமும் பொது முக்கியமும் வாய்ந்த காரியத்தைப்பற்றி விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டி ஓர் நோட்டீஸ் கொடுத்திருக்கிறேன்:—

" மதுரை மாவட்டத்தில் தயாரான ரூ. 1 கோடி மதிப்புள்ள கைத்தறி வேட்டிகளும், கைத்தறி சேலைகளும் ஏற்றுமதியாகாமல் தேங்கி சுமார் 10 ஆயிரம் நெசவாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கும் நிலை."

அண்மையில் தமிழகத்தில் ஏற்பட்ட இந்தி மொழிக் கிளர்ச்சியின் காரணமாக தமிழகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் கைத்தறி வேஷ்டிகளையும் கைத்தறி சேலைகளையும் வட பகுதி மாநிலங்களிலுள்ளவர்கள் வாங்குவதற்கு மறுக்கிறார்கள். அதனால் அவைகள் தேங்கி, நெசவாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அத்துடன் தமிழக கைத்தறி நெசவாளர்களுக்கு கடன் உதவித் தொகையை வட நாட்டினர்கள் கொடுக்கவும் மறுக்கிறார்கள். இதன் காரணமாக, தமிழகம் பூராவிலும் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு மிகவும் சங்கடமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான நெசவாளர்கள் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தமிழகம் பூராவிலுமுள்ள நெசவாளர்கள் பற்றிய பிரச்னை இது. இது அரசினரின் அன்றாட அலுவல்களுக்குட்பட்ட பிரச்னை என்று சொல்வதற்கில்லை. ஆகவே, இந்த அவசரமும், பொது முக்கியமும் வாய்ந்த காரியத்தைப்பற்றி விவாதிக்க, பேரவையின் இதர அலுவல்களை ஒற்றிவைக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்தத் கைத்தறி துணிகளைப் பொறுத்தவரையில், தேக்கம் ஏற்பட்டது திடீரென்று புதியதாக இப்பொழுது மட்டும் ஏற்பட்டிருக்கிற ஒன்று அல்ல, ஆண்டுதோறும் ஏற்பட்டு வருகிற ஒன்றுதான். அதற்காக என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமோ அவைகளை முறைப்படி இந்த ஆண்டும் எடுத்துக்கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டு கிட்டத்தட்ட 2½ அல்லது 3 கோடி ரூபாய் பெறுமானமுள்ள கைத்தறித் துணிகள் தேங்கியிருக்கின்றன. அதற்காகத்தான் சமீபத்தில்கூட கைத்தறிக் கண்காட்சி, கைத்தறி வார விழாக்களெல்லாம் கொண்டாடப்பட்டன. மேலும், இவைகளை வெளிநாடுகளுக்கு அனுப்புவது, அல்லது வேறு வகையிலே எப்படிச் செலவழிப்பது என்பது பற்றியெல்லாம் கைத்தறி இயக்குநர் ஆராய்ந்து வருகிறார்கள். இது சாதாரண நிர்வாகத்திற்குட்பட்ட அன்றாட நடவடிக்கையாக இருப்பதினாலும், இந்தச் சபையை ஒற்றி வைத்து விவாதிப்பதின் மூலம் ஒரு முடிவு காண்கிற நிலை ஏற்படாது என்பதாலும், தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதாலும், இதைப்பற்றி விவாதிக்க சபையை ஒற்றிவைக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. என். எஸ். வி. சித்தன் எழுந்திருந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதி 41-ன் கீழ் அறிவிக்கை கொடுத்திருந்தால், ஒரு வினா கேட்கலாம். இத்தீர்மானத்தை விதி 42-ன் கீழே கொடுத்திருக்கிறீர்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் : நான் வினா கேட்கவில்லை. நான் முன்னால் கூறியதுபோல, பல ஆயிரக்கணக்கான நெசவாளர்களுடைய பிரச்னை இதில் அடங்கியிருப்பதால், அரசு ஒரு தனி அதிகாரியையோ அல்லது தூதுக் குழுவையோ பிற மாநிலங்களுக்கு அனுப்பி உடனே ஏற்றுமதி செய்வதற்கு வழிவகைகள் காண வேண்டும் என்று கூறிக்கொண்டு, என்னுடைய ஒற்றிவைப்புப் பிரேரணையை நான் வற்புறுத்தவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்களுடைய ஒற்றிவைப்புத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகிறது.

(ii) மதுரையிலிருந்து சென்னைக்கு விமான மூலம் மல்லிகைப்பூ அனுப்ப இயலாமை.

திரு. கரு. சீமைச்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, விதி 42-ன் கீழ், இன்றைய அலுவலை ஒற்றி வைத்து, கீழ்க்கண்ட உடனடி முக்கியத்துவம் வாய்ந்த பொருள் பற்றி விவாதிக்க வேண்டுமென்பதற்காக அறிவிக்கை கொடுத்துள்ளேன்:—